வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 135 of 2018

வழக்கு சாட்சி - PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பொன்னுசாமி | தொழில் | :விவசாயம் |
| தந்தை பெயர் | : பழனிச்சாமி | வயது | : |
| கிராமம் | : வேலம்பட்டி | | |
| தாலுக்கா | : பல்லடம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.05.2025.

(எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**முதல் விசாரணை :** **நாள் : 21.05.2025**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 25.08.2016 ம் தேதி மாலை 4.45 மணியளவில் நானும் எனது பக்கத்து தோட்டத்து காரரான நடராஜ் என்கிற ராமசாமியும் திருப்பூர் - தாராபுரம் ரோட்டின் மேபுறம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கார் ஒன்று வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்தது. அப்போது இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதி அந்த வேகத்தில் அருகில் இருந்த மரத்தின் மீது மோதியது அதில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் குழிக்குள் விழுந்து விட்டார்கள். நானும், ராமசாமியும் இருவரையும் குழியிலிருந்து தூக்கி ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தோம். இருசக்கர வாகனத்தை பார்த்த போது இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபரின் அப்பா எனக்கு பழக்கம் என்பதால் அவருக்கு போன் செய்து தகவல் சொன்னேன். சிகிச்சைக்காக திருப்பூர்குமரன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து மேல்சிகிச்சைக்காக கோவை கேஎம்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சிகிச்சையிலிருந்த கார்த்தி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். விபத்து ஏற்பட்டவுடன் விபத்தில் காயம்பட்ட நபர்களை பார்த்து அவருக்கு முதலுதவி அளித்ததால் கார் ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்க்கவில்லை. மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை விபத்து நடந்தற்கு மறுநாள் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

அந்த விசாரணையில் நான் என்ன வேலையாக வந்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடப்பதற்கு முன்னிட்டு எந்தெந்த வாகனம் எந்தெந்த திசையில் வந்தது என்று பார்க்கவில்லை என்றால் பைக் வடக்கே வந்தது கார் தெற்கே வந்தது மோதியவுடன் பார்த்தேன். விபத்து நடந்ததற்கு முன்பு அந்த வாகனத்திற்கு முன்பு எந்த வாகனம் சென்றது என்று தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு நான் பார்த்தேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டவுடன் பார்த்ததால் அந்த வாகனங்கள் என்ன வேகத்தில் வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு போலீசார் வந்தார்கள் என்றால் நாங்கள் ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டு சென்று விட்டோம். விபத்தில் காயம்பட்ட நபர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் விபத்து நடந்த போது நான் எந்த திசையில் நின்று கொண்டிருந்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்திற்குள்ளான வாகனங்களின் பதிவெண்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA
Date: 2025.05.21 19:37:32 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 135 of 2018

வழக்கு சாட்சி - PW8

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | முனியப்பன் | தொழில் | :காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| தந்தை பெயர் | : | குருசாமி | வயது | : |
| கிராமம் | : | அவினாசிபாளையம், காவல்நிலையம் | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.05.2025.

(எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**முதல் விசாரணை :** **நாள் : 21.05.2025**

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்பொது கோவையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 26.08.2016 ம் தேதி அவினாசிபாளையம், காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது ஆதிகாட்டுபாளையத்தை சேர்ந்த பொன்னுசாமி மகன் முத்துசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அவினாசி பாளையம் காவல் நிலைய குற்ற எண்.507/2016 பிரிவுகள் 279,337,304(A)இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். அசல் முதல் தகவல் அறிக்கையினையும், வாதியின் புகாரினையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். புலன் விசாரணைக்காக தெய்வசிகாமணி பொறுப்பு அலுவலரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

வழக்கு விபத்து 25.08.2016 ம் தேதியன்று மாலை 4.45 மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டு மறுநாள் காலை 6 மணிக்கு விபத்து குறித்து தகவல் கிடைத்தது அதற்கு முன்பாக மருத்துவமனையிலிருந்து ஏதாவது தகவல் கிடைத்ததா என்ற விவரத்தை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரியாது. 14 மணி நேர காலதாமதத்திற்கு என்ன

காரணம் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் உறவினர்கள் இல்லாததால் காலதாமதம் ஏற்பட்டதாக வாய்மொழியாக சொன்னார்கள் எழுத்துமூலமாக சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை 26.08.2016 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றத்திற்கு 29.08.2016 ம் தேதி அனுப்பப்பட்டதற்கு காலதாமதம் உள்ளதா என்றால் நீதிமன்ற காவலிற்கு அனுப்பிவிட்டேன்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA
Date: 2025.05.21 19:37:44 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.